செய்தி வெளியீடு எண். 128 நாள்.01.03.2017

**திருவள்ளூர் மாவட்டத்தில் மேல்நிலை அரசுப் பொதுத் தேர்வுக்கான முன்னேற்பாடு பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

~~~~~

மேல்நிலைப் பொதுத் தேர்வுகள் 02.03.2017 முதல் 31.03.2017 வரை நடைபெறவுள்ளது. இத்தேர்வில் 22,382 ஆண்களும், 24,664 பெண்களும் ஆக மொத்தம் 47,046 தேர்வர்கள் தேர்வு எழுதவுள்ளனர். இத்தேர்வுக்கு 106 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. சிறைவாசிகளின் வசதிக்காக புழல் மத்திய சிறையில் தனித்தேர்வர் மையம் ஒன்று அமைக்கப்பட்டு, இம்மையத்தில் 97 சிறைவாசிகள் தேர்வெழுதவுள்ளனர். மேல்நிலைத் தேர்விற்காக வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்களாக இம்மாவட்டத்தில் 17 கட்டுக்காப்பு மையங்கள் அமைக்கப்பட்டு ஒவ்வொரு கட்டுக்காப்பு மையத்திற்கும் அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் ஒருவரும் மூத்த முதுகலை ஆசிரியர் ஒருவரும் நியமனம் செய்து ஆக மொத்தம் 34 வினாத்தாள் கட்டுக்காப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

வினாத்தாட்கள் அனைத்தும் அரசுத்தேர்வுகள் இயக்குநரிடமிருந்து பெறப்பட்டு அந்தந்த வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்களில் வைக்கப்பட்டு ஆயதம் ஏந்திய காவலர்கள் மேற்பார்வையில் பாதுகாப்பாக உள்ளது. ஒவ்வொரு தேர்வு மையத்திற்கும் தேர்வர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வினாத்தாள்கள் போதுமான அளவு பெறப்பட்டுள்ளது. தேர்வினை நன்முறையில் நடத்த திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கத்தில் வருவாய்த்துறை, காவல்துறை, போக்குவரத்து துறை, மின்வாரியத்துறை மற்றும் கல்வித்துறை அலுவலர்களுடன் மேல்நிலை, இடைநிலை அரசுப் பொதுத் தேர்வுக்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட தேர்வுக்குழு கூட்டம் நடைபெற்றது.

இம்மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 106 தேர்வு மையங்களுக்கும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களை முதன்மைக் கண்காணிப்பாளர்களாகவும், மூத்த முதுகலை ஆசிரியர்களை துறை அலுவலர்களாகவும் அனைத்து தேர்வு மையங்களுக்கும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தேர்வர்களின் எண்ணிக்கை 400க்கும் அதிகமாக உள்ள மையங்களுக்கு கூடுதல் முதன்மைக் கண்காணிப்பாளர்களும், கூடுதல் துறை அலுவலர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மாற்றுத்திறனாளிகள் மற்றும் நரம்பியல் குறைபாடு காரணமாக பாதிக்கப்பட்ட தேர்வர்களுக்கு தேர்வு எழுத சலுகையாக கூடுதல் ஒருமணிநேர சலுகை 185 மாணவர்களுக்கும், சொல்வதை எழுதுவோர் சலுகை 165 மாணவர்களுக்கும் அரசுத் தேர்வுகள் இயக்குநரால் அனுமதி வழங்கப்பட்டு சம்பந்தப்பட்ட மாவட்ட கல்வி அலுவலர் மூலமாக சொல்வதை எழுதும் ஆசிரியர் நியமனம் செய்யப்பட்டுள்ளது.
~~~~~

அனைத்து தேர்வு மையங்களுக்கும் 20 தேர்வர்கள் கொண்ட ஓர் அறைக்கு ஓர் அறை கண்காணிப்பாளர் வீதம் 2510 அறை கண்காணிப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தேர்வர்கள் ஒழுங்கீனச் செயல்களை தடுக்கும் பொருட்டு 74 பறக்கும் உறுப்பினர்களும், 250 நிரந்தரப்படை உறுப்பினர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இதுதவிர மாவட்ட ஆட்சியரால் நியமனம் செய்யப்படும் வருவாய்த்துறை மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் தேர்வு மையத்தினை திடீர்பார்வை மேற்கொள்வர். வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்களிலிருந்து தேர்வு மையங்களுக்கு வினாத்தாள்களை கொண்டு செல்ல 30 வழித்தடங்கள் அமைக்கப்பட்டு இவ்வழி தடங்களுக்கு 60 வழித்தட அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தேர்வு மையங்களுக்கு முதன்மைக் கல்வி அலுவலரால் நியமனம் செய்யப்பட்டுள்ள முதன்மைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் துறை அலுவலர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தேர்வு மையங்களுக்கு சென்று தேவையான முன்னேற்பாடுகளை செய்து முடித்துள்ளனர். மேலும் தேர்வு மையங்களுக்கு தேவையான எழுதுபொருள்கள் அனைத்தும் போதுமான அளவு ஒவ்வொரு தேர்வு மையத்திற்கும் பெறப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் அரசுத் தேர்வுகள் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யவேண்டிய (CENTRE NOMINAL ROLL, ATTENDANCE SHEET, HALL WISE SEATING PLAN AND COVER PLAN) ஆகியவை பதிவிறக்கம் செய்யப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். தேர்வு மையங்களுக்கு தேர்வுகள் நடைபெறும் நாட்களில் தடையற்ற மின்சாரம் வழங்க மின்சார வாரிய உயர் அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேபோல் சீரான போக்குவரத்து குறித்த நேரத்தில் இயக்குவதற்காக மாநகர் மற்றும் மண்டல போக்குவரத்து மேலாண் இயக்குநர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. தேர்வு மையங்கள் அனைத்திலும் வகுப்பறைகளில் குழாய் விளக்குகள், மின்விசிறிகள் நன்முறையில் இயங்க ஏதுவாகவும், சுகாதாரமான குடிநீரை ஒவ்வொரு தேர்வு அறை முன்பாக குடங்களில் வைக்கவும், தேர்வு மைய வளாகம், கழிப்பறைகள் போன்றவை எந்நேரமும் தூய்மையாக வைத்திருக்கவும் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தேர்வு நாளன்றும் வழித்தட அலுவலர்கள் மூலமாக வினாத்தாட்களை தேர்வு மையங்களுக்கு சென்று ஒப்படைக்கவும், தேர்வுகள் முடிந்தவுடன் விடைத்தாள்களை வழித்தட அலுவலர்கள் மூலமாக விடைத்தாள் சேகரிப்பு மையத்தில் ஒப்படைக்கவும் ஆயுதம் ஏந்திய காவலர்கள் தயார் நிலையில் உள்ளனர். தேர்வர்கள் தேர்வு எழுதும் போது தேர்வறைக்குள் அனுமதிக்கப்படாத ஆவணங்கள் மொபைல் போன், கால்குலேட்டர், வாட்ச், ஷு, பென்டிரைவர், பெல்ட், மற்றும் பர்ஸ் போன்றவற்றை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது.

அரசுப் பொதுத் தேர்வுகள் செம்மையான முறையில் நடத்திட முன்னேற்பாடு நடவடிக்கைகள் அனைத்தும் சிறப்பான முறையில் செய்யப்பட்டுள்ளது என்று மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**